முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 17 திகதி முதல்
சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 24 திகதி வரை
(03.12.2023 ஞாயிறு முதல் 10.12.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. கலித்துன்பம் அகற்றி மீட்க
   கந்தப் பெருமான் சக்தியாக
   அழியாமை பெற்றுவந்த ஞானியே
   ஆறுமுக அரங்கனே உமைபோற்றி
2. போற்றியே சோபகிருது தேள்திங்கள்
   புகலுவேன் மூவைமீர் திகதி மேலாக
   உற்றதொரு அறுநான்கு திகதிவரை
   உரைப்பேன் இந்தியா தமிழகம் தன்னில்
3. தன்னிலே நடக்கும் நிகழ்வாக
   தக்க வருங்கால பலன்குறித்த ஆசி
   நன்னயமாய் அகத்திய மகரிஷியும்
   நாட்டிடுவேன் வார ஆசிபலனாக
4. ஆகவே கலியின் கஷ்டங்களாக
   அதிகார வர்க்கங்கள் செய்கின்ற
   மிகையான சீர்கேடுகள் எல்லாம்
   முடிவுக்கு வருகின்ற வண்ணம்
5. வண்ணமுடன் கையூட்டு களவு
   வருவாய்கள் அனைத்துமே
   மன்னவன் ஆறுமுகன் வெளிப்பட
   மக்கள் தேவைக்கு ஏற்ற வண்ணம்

6. வண்ணமுடன் சேவை நிதியாக
வருங்கால காப்பு நிதியாக
அண்ணல் தருமம் வளர்த்திடும்
அறம் நிதியாக மாறி பயன்தரக்கூடும்
7. கூடவே நீதித்துறை தானும்
குருபரன் குருவரங்கள் சக்தி
கூடவே வலிமை நிறைந்துமே
கோளாறு கண்ட துறைகள் எல்லாம்
8. எல்லாமே மக்கள் அறியும்படி
இவ்வுலகில் வெளிப்படுத்தப்பட்டு
அல்லல்பட துறை வாரியாக
அதிகார பலம் தாண்டி களை
9. களை எடுக்கப்பட்டு முடிவுகள்
கந்தவேலனே நடத்தும் காலம்
பிழையற அரங்கேற இருக்க
புகலுவேன் தகாத வழிகள்தனை மாற்றி
10. மாற்றியே உண்மை ஞானவழி
மாதவ மாதரும வழிமுறை ஏற்று
ஆற்றல்பெற அனைவரும் வருக
அமைதி பாதுகாப்புதரும் ஞானஆட்சியாக மலரும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 17ம் நாள் 03.12.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் கார்த்திகை மாதம் 24ம் நாள் 10.12.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

உலக மக்களை கலியுகத்தின் துன்பங்களில் இருந்து மீட்டு காப்பாற்றிடவே முருகப்பெருமானின் சக்தி வடிவமாக அழிவிலா நிலையை பெற்று அவதரித்திட்ட மகா ஞானியே ஆறுமுக அரங்க மகா தேசிகரே உம்மை போற்றியே சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 17ம் நாள் 03.12.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் கார்த்திகை மாதம் 24ம் நாள் 10.12.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார

ஆசி நூலாக அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

கலியுகத்தின் துன்பங்களாக மக்களிடம் அதிகாரிகள் சிலர் பெறுகின்ற மிகையான சீர்கேடுகள் எல்லாம் முடிவிற்கு வருகுதப்பா லஞ்சம் பெறுதல் களவு செய்தல் என வஞ்சித்து சேர்த்த பொருள்கள் எல்லாம் முருகப்பெருமானின் அருளினால் வெளிப்பட்டு மக்களுக்கே சென்றடையும் வண்ணம் நிகழப் போகுதப்பா. தர்மவான்களிடம் சேர்ந்துமே அந்த நிதிகள் எல்லாம் தர்மம் வளர்க்கும் நிதியாக மாறி மக்கள் பயனடையுமாறு ஆகிடுமப்பா.

தருமத்தின் காவலன் ஆறுமுக அரங்க மகானின் தர்மசக்தி பெருகிடுமப்பா அரங்கனின் தர்மம் பெருகிடுவதோடு மக்களின் தர்மமும் பெருகிட பெருகிட நாட்டினில் குளறுபடியாக நடக்கின்ற துறைகளில் எல்லாம் மக்கள் அறியுமாறு குளறுபடிகள் எல்லாம் வெளியாகி நீதித்துறையும் வலுவடைந்து தவறு நடக்கும் துறைகளில் எல்லாம் அதிகார பலத்தையும் தாண்டி நீதி தேவனால் களை எடுக்கப்பட்டு முருகப்பெருமானின் நேரடிப் பார்வையிலே சரி செய்யப்பட்டு நல்லவைகள் முழுதுமாய் நடக்க இருக்குதப்பா.

ஆதலினாலே மக்களே இனிமேலாகினும் தாங்கள் செல்லும் தகாத வழிகளை கைவிட்டு மாதவ நெறிகளையும் தரும நெறிகளையும் ஏற்று அவரவரும் ஆற்றல் பெற்று தரும வழி நடந்து வரவர நாட்டின் நிலைமையே மாற்றம் அடைந்து அமைதியும், பாதுகாப்பும் மிக்க அற்புத ஞான ஆட்சியாக மலர்ந்திடுமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–